**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 310 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW12 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Tmt. Santhi |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 31st day of August, 2026.

**(Accused is present )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.10 மணி

நான் தற்போது அனைத்து மகளிர் காவல் நிலையம் பொன்னேரியில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23-04-2021 அன்று நான் நிலைய அலுவலலில் ஆஜரில் இருந்தபோது மாலை சுமார் 4.30 மணியளவில் காவல்

ஆய்வாளர் திருமதி. மகிதா அன்ன கிரிஸ்டி எனக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பொன்னேரி அரசு பொது மருத்துவமனைக்கு என்னை செல்லுமாறு உத்தரவிட்டிருந்தார். அங்கு பாதிக்ப்பட்டிருந்த பெண் சிவரஞ்சினி பழவேற்காடுஅரசு பொது மருத்துவமனையிலிருந்து பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக வருவதாகவும் அவர் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதற்கு உதவிபுரியுமாறு என்னிடம் கூறினார். அப்போது மணி 17.10 மணியிருக்கும். நான் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். 108 ஆம்புலன்ஸில் சுமார் 17.10 மணியளவில் சிவரஞ்சினி கொண்டுவரப்பட்டார். நான் சிவரஞ்சினியை பார்க்கும்போது அவருக்கு இடது கண்ணில் இரத்தம் கன்றி வீங்கிய நிலையில் இருந்தது. மருத்துவர் மோகன் ராஜ் அவர்களிடம் சிவரஞ்சினியை அழைத்து சென்றேன். மருத்துவர் மோகன் ராஜ் விசாரித்து பாலியல் வன்கொடுமை என்று விபத்து பதிவேடு பதிவு செய்தார். அங்கிருந்த Gynecologist அனுரத்னாவிடம் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். சிவரஞ்சினிக்கு அங்கு மேல் சிகிச்சை அளித்தார்கள். இது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் பெண்ணை பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் 108 ஆம்புலன்ஸில் வந்தவரை பொன்னேரி மருத்துவமனையில் மருத்துவரிடம் அழைத்து சென்றேன். மருத்துவரிடம் என் பெயர் சாந்தி, உதவி ஆய்வாளர் என்று கூறினேனா என்றால் கூறினேன். நான் கூறியதை மருத்துவர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். நான் பாதிகப்பட்ட பெண்ணை மருத்துவர் பரிசோதிக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். பாதிக்கப்பட்ட பெண் மருத்துவரிடம் மாலை 3.00 மணியளவில் பாத்ரூம் போனபோது தன்னை தெரிந்த நபர் பன்னீர் செல்வம் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக மருத்துவரிடம் தெரிவித்தார். இந்த வழக்கு சம்பவ காலத்தில் நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான்.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது நான் பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் நான் விசாரணை செய்யவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணை ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் நான் சென்ற 5 – 10 நிமிடத்தில் வந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் புலன் விசாரணை செய்யும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு செல்ல ஆய்வாளர் எத்தனை மணிக்கு தகவல் கூறினார் என்றால் சுமார் மாலை 4.30 மணியளவில் கூறினார். அப்போது நான் காவல் நிலையத்தில் இருந்தபோது அது குறித்து general diary பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்துள்ளேனா என்று ஞாபகமில்லை. நான் மருத்துவமனைக்கு சென்றபோது பாதிக்கப்பட்ட பெண்ணுடன் ஒரு பெண் வந்தார். அவர் பெயர் எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்ற பிறகு பாதிக்கப்பட்ட பெண்ணுடன் சென்றது குறித்து காவல் ஆய்வாளரிடம் தனி அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பாதிக்கப்பட்ட பெண் மருத்துவரிடம் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்ததாக கூறினார் என்றால் பிற்பகல் 3.00 மணிக்கு நடந்ததாக கூறினார். முதன்முதலில் சிவரஞ்சியின் வழக்கு சம்பந்தமாக திருப்பாலைவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து பின்னர் எங்கள் காவல் நிலையத்ததில் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பன்னீர்செல்வம் பாலியல் வன்கொடுமை செய்ததாக பாதிக்கப்பட்ட பெண் மருத்துவரிடம் கூறினாரா என்றால் கூறினார். மருத்துவர் விபத்து பதிவேட்டில் பதிவு செய்துள்ளார். நான் பாதிக்கப்பட்ட பெண் சேருடன் கலந்த உடையுடன் வந்தாரா என்றால் அவர் நைட்டி அணிந்திருந்தார். பழைய நைட்டி தான். உடம்பில் காயம் இருந்தது. உடம்பில் சேறு இருந்தது. நைட்டிக்கு கீழ் பார்டரில் சேறு இருந்தது. மார்பகம் பக்கம் சேறு இருந்ததா என்றால் ஷால் போட்டிருந்தார். ஷாலில் சேறு இருந்ததா என்றால் இல்லை. ஆய்வாளர்

பாதிக்கப்பட்ட பெண்ணின் ஷால் மற்றும் நைட்டி ஆகியவற்றை கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றினார்கள். சுடிதார் பேண்ட் போட்டிருந்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த உடைகள் சம்பவத்தின் போது சிவரஞ்சினி அணிந்திருந்த உடையா என்று சிவரஞ்சினி கூறினாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆய்வாளர் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் நான் சென்ற 5–10 நிமிடத்தில் வந்தார். பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து எத்தனை மணிக்கு துணிகளை கைப்பற்றினார் என்றால் நேரம் சரியாக ஞாபகமில்லை. துணியை கைப்பற்றும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. வேறு யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சிவரஞ்சினியை ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் வாங்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur